## சுருக்கம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம் – அரசு மற்றும் அரசு உதவி பெறும் மாலை நேர/ இரண்டாவது ஷிப்ட் (Second Shift) முறையில் இயங்கும் கல்லூரிகளில் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவ / மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (சிந.2)த் துறை.**

**அரசு ஆணை (நிலை) எண்.70.** **நாள்.25.7.2007.**

**திருவள்ளுவர் ஆண்டு 2038,**
**சர்வஜித், ஆடி 9,**

படிக்கப்பட்டது:

1. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநரின் கடித எண். டி.1/6497/2006, நாள்.6.9.06.

* * * *

**ஆணை:**

2007–08 –ஆம் ஆண்டிற்கான பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை தொடர்பான மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தமது உரையில் கீழ்க்கண்டவாறு அறிவித்துள்ளார்.

> "கல்வி உதவித் தொகை மாலை நேரக் கல்லூரிகளில் பயிலும் அனைத்து ஏழை பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ / மாணவிகளுக்கு வழங்கப்படும்"

2. அரசு / அரசு நிதியுதவி பெறும் முழுநேர கல்லூரிகளில் (Regular Colleges) பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவ / மாணவிகளுக்கு மட்டும் கல்வி உதவித் தொகை மற்றும் இலவச கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. கல்வி பயில வேண்டும் என்ற விழிப்புணர்வு அதிகரித்துள்ளதாலும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு அதிக அளவில் கல்லூரிகள் துவக்கப்படாததாலும், அனைத்து மாணவர்களுக்கும் முழுநேர கல்லூரிகளில் (Regular Colleges) இடம் கிடைக்காமல் அவர்கள் பகுதி நேர முறையில் இயங்கும் மாலை நேரக் கல்லூரிகளில் (Shift Sytem) சேர்ந்து பயில்கிறார்கள். இவ்வாறு பகுதி நேர முறையில் இயங்கும் கல்லூரிகளில் (Shift System) பயிலும் மாணவ / மாணவிகளுக்கு இதுவரை கல்வி உதவித் தொகையோ அல்லது இலவச கல்வி உதவித் தொகையோ வழங்கப்படவில்லை என்றும், முழுநேர கல்லூரிகளில் (Regular Colleges) பயிலும்

மாணவ / மாணவிகளுக்கு எந்த அடிப்படையில் உதவித் தொகை வழங்கப்படுகிறதோ அதே அடிப்படையில் பகுதி நேர முறையில் இயங்கும் மாலை நேரக் கல்லூரிகளில் (Shift Sytem) பயிலும் மாணவ / மாணவிகளுக்கும் கல்வி உதவித் தொகை மற்றும் இலவச உதவித் தொகை வழங்குவதற்கான கருத்துருவினை பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர் அனுப்பியுள்ளார்.

3. சமுதாயத்தில் மிகப் பின்தங்கிய நிலையிலுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மாணவ / மாணவிகளின் நலன் கருதி மேற்தெரிவித்த காரணங்களின் அடிப்படையில் பிற்பகல் முதல் துவங்கும் அரசு மற்றும் அரசு உதவிபெறும் மாலை நேரக் கல்லூரிகளின் (Shift System) பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மாணவ / மாணவியர்களுக்கு, காலைநேர அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மாணவ / மாணவியருக்கு உதவித் தொகை வழங்கப்படுவது போன்று, இதர தகுதிகளுக்குட்பட்டும், கூடுதலாக மாணவ / மாணவிகள் வேலைக்குச் செல்லவில்லை என்பதற்கான சான்று, துணை வட்டாட்சியருக்குக் குறையாத அந்தஸ்துள்ள அலுவலரிடமிருந்து பெற்று அளிக்கவேண்டும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையிலும், கல்வி உதவித் தொகை மற்றும் இலவசக் கல்வி உதவித் தொகை (Free Education Scheme) திட்டங்களை நீட்டிப்பு செய்து உத்தரவு பிறப்பிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார். இதனால் அரசுக்கு நடப்பு ஆண்டில் ரூ.4.79 கோடி கூடுதல் செலவினம் ஏற்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

4. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநரின் கருத்துருவினை பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று காலைநேர அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மாணவ / மாணவியருக்கு உதவித் தொகை வழங்கப்படுவது போன்று பிற்பகல் முதல் துவங்கும் அரசு மற்றும் அரசு உதவிபெறும் மாலை நேரக் கல்லூரிகளில் (Shift Sytem) பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மாணவ / மாணவியர்களுக்கும் 2007–08 ஆம் ஆண்டு முதல் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு கல்வி உதவித் தொகை வழங்க அரசு ஆணையிடுகிறது.

(i) காலைநேர அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவ / மாணவிகளுக்கு வழங்கப்படும் அதே விதிமுறைகளுக்கும், வரையறைகளுக்கும் உட்பட்டு, அரசு மற்றும் அரசு உதவிபெறும் மாலை நேரம் / ஷிப்ட் முறையில் இயங்கும் கல்லூரிகளில் பயிலும் மாணவ / மாணவிகளுக்கும் கல்வி உதவித் தொகை வழங்கலாம்.

(ii) பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பு மற்றும் குடும்பத்தில் முதல் பட்டதாரி போன்ற நிபந்தனைகள் காலை நேரக் கல்லூரிகளுக்கு எவ்வாறு உள்ளதோ அதே நிபந்தனைகள் மாலை நேரக் கல்லூரியில் (Shift System) படிப்பவர்களுக்கும் பொருந்தும்.

மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை (பள்ளி மேற்படிப்பு)
Post Matric Scholarship

**Rs.60,00,000/-**

2225 – ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 – கல்வி – பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்ட பணிகள் II மாநிலத் திட்டம் – KF – மெட்ரிக்குலேஷனுக்கு மேற்பட்ட வகுப்புகளில் பயிலும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை – 12 – படிப்புதவித் தொகைகளும், பயிற்சி உதவித் தொகைகளும் – 09 ஏனையவை.

(கு.தொ.கு.2225 – 03 – 277 – KF – 1293)

மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை (இலவசக் கல்வித் திட்டம்)
(Free Education Scheme)

**Rs,29,30,000/-**

2225 – ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277. கல்வி – பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்ட பணிகள் II மாநிலத் திட்டம் – KG – பி.ஏ., பி.எஸ்சி., பி.காம்., பட்டப்படிப்புகளில் படிக்கின்ற மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ / மாணவியர்களுக்கு இலவசக் கல்வி – 12 படிப்புதவித் தொகைகளும், பயிற்சியுதவித் தொகைகளும் – 09 ஏனையவை.

(கு.தொ.கு. 2225 – 03 – 277 – KG – 1291)

6. இச்செலவினம் ஒரு புதுப்பணிக் குறித்த செலவினமாகும். இதற்காக சட்ட மன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதலில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணமாக பெற்று செலவிட இதற்கான ஆணை நிதி (வரவு–செலவு–1) துறையால் தனியே வெளியிடப்படும். எதிர்பாரா செலவின நிதியிலிருந்து இம்முன் பணத்தைப் பெறத் தேவையான விண்ணப்பத்தை வரையறுக்கப்பட்ட படிவத்தில் இவ்வரசாணை நகல்களை இணைத்து நிதி (வரவு–செலவு பொது–1) துறைக்கு விண்ணப்பிக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண். 185 / ADS (G.V) / 2007, நாள். 24.7.07. –ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் செலவின ஒப்பளிப்பு பேரேடு எண்.546.

(ஆளுநரின் ஆணைப்படி)

என். [illegible],
அரசு செயலாளர்.

பெறுநர்

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர், சென்னை –5
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர், சென்னை –5

(iii) இந்த மாலை நேரக் கல்லூரிகள் மற்றும் இரண்டாம் சுழற்சி (Second Shift) பயிலும் மாணவ / மாணவியர்கள் பகுதி நேரமாகவோ அல்லது முழு நேரமாகவோ அரசு அல்லது தனியார் நிறுவனங்களில் பணிபுரியாதவர்களாக இருத்தல் வேண்டும்.

(iv) தாங்கள் வேலைக்கு செல்லவில்லை என பெற்றோர் சான்றை துணை வட்டாட்சியருக்கு குறையாத அந்தஸ்துள்ள அலுவலரிடமிருந்து பெற்று அளிக்கவேண்டும்.

5. 2007-08 ஆம் ஆண்டில் இதற்கான செலவினமாக ரூ.154.30 இலட்சம் ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது. இச்செலவினம் கீழ்க்கண்ட கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

<u>பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை (பள்ளி மேற்படிப்பு)</u>
<u>(Post Matric Scholarship)</u>

<u>Rs.50,00,000/-</u>

2225 – ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277. கல்வி – பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JF – மெட்ரிக்குலேஷனுக்கு மேற்பட்ட வகுப்புகளில் பயிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை – 12 – படிப்புதவித் தொகைகளும், பயிற்சி உதவித் தொகைகளும் – 09 ஏனையவை.

(கு.தொ.கு.2225 – 03 – 277 – JF – 1294)

<u>பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை (இலவசக் கல்வித் திட்டம்)</u>
<u>(Free Education Scheme)</u>

Rs.15,00,000/-

2225 – ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 – கல்வி – பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்ட பணிகள் – II – மாநிலத் திட்டம் – JO – பட்டப்படிப்பு கல்வி வரை பயிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை – 12. படிப்புதவித் தொகைகளும், பயிற்சி உதவித்து தொகைகளும் – 09 ஏனையவை.

(கு.தொ.கு.2225 – 03 – 277 – JO – 1296)

அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,
தனித் துணை ஆட்சியர், (கள்ளர் சீரமைப்பு), மதுரை.
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்,
மாநிலக் கணக்காயர், சென்னை – 18/35/6(பெயரில்)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை –5/9

நகல்:

நிதித் (பி.மி.பி) துறை, சென்னை –9
நிதி(வரவு–செலவு–1)துறை,
சென்னை –9
மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர்,
சென்னை–9
இருப்புக் கோப்பு/உபரி நகல்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

இரா. மணி
2.7.07
பிரிவு அலுவலர்.
&
2.7.07